**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 76/2021**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் தரப்பு Dw1 சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**Dw1(துரைசாமி) நாள் 03.03.2026**

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

வாதி எனது தம்பி. தாவா சொத்து என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். வாதி செங்கல் வியாபாரம் செய்து வருகிறார். என் தகப்பனார் 17.08.2009 ல் இறந்தார். என் அம்மா 26.08.2020 ல் இறந்தார். என் தகப்பனார் தாவா சொத்தை 5.2.1990 ல் கிரயம் பெற்றார். 1080 சதுரடி இரண்டு இன சொத்துக்களாக தாவாவில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. என் தகப்பனார் கிரயம் பெற்ற காலத்தில் முன்னால் ஒரு ஓட்டு கூரையுடன் கடையும் அதன்பின் பகுதியில் ஓட்டு கூரையுடன் ஒரு வீடும் இருந்தது. அதன் பட்டா வீட்டு வரி ஆகியவை என் தகப்பனார் பெயரில் தான் இருந்தது. என் தகப்பனார் அதில் ஓட்டல் கடை நடத்தி வந்தார். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் படிப்பு முடித்தவுடன் எலெக்டிரிசியன் வேலை பார்க்க சென்று விட்டேன் என்றால் என் தகப்பானர் இறந்ததற்கு பின்னிட்டு தான் சென்றேன். அதற்கு முன்பு நான் மாட்டுத் தீவன தட்டு, தண்ணீர் வண்டி ஆகியவை செய்து வந்தேன். எனக்கு 1991 ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னிட்டு நான் தாவா சொத்தில் இல்லாமல் வேறு இடத்திற்கு குடிபெயர்ந்து விட்டேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் உயிருடன்இருந்த காலத்திலேயே சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்தில் உள்ள கடை பகுதியை தனது ஆயுட்காலத்திற்கு பின்னிட்டு எனது தம்பிக்கு சேர வேண்டும் என ஒரு பதிவு உயில் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கில் சாட்சியம் அளித்துள்ள வாசா2 கிருஷ்ணமூர்த்தி எனக்கு

என்ன உறவு முறை என்றால் என் தகப்பனாரின் சகோதரியின் பேரன். கிருஷ்ணமூர்த்திக்கும் எனக்கும் விரோதம் எதுவுமில்லை. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தில் இருந்த ஓட்டு கட்டிடத்தை இடித்துவிட்டு சிறிதாக தார்ஸ் கட்டிடம் கட்டப்பட்டது. அதில் தரைதளத்தீ உள்ள கடைப்பகுதி மற்றும் வீட்டுப் பகுதி வாதிக்கும், முதல் தள பகுதி எனக்கும் சேர வேண்டியது என பேசப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் என் பெற்றோர் உயிருடன் இருந்த காலத்தில் என் சகோதரருடன் தரை தளத்தில் உள்ள வீட்டில் ஒன்றாக குடியிருந்தனர் என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம். என் தம்பி தான் எனது பெற்றோரை அவர்கள் இறுதி காலம் வரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. தரைதளத்தில் உள்ள கடை பகுதிக்கு வாதி தான் வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. தரைதளத்தில் உள்ள கடை பகுதியை வாதி அவரின் செங்கல் வியாபாரத்திற்கு அலுவலகமாக பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. வாதி வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தான் வேறு வீட்டிற்கு குடி சென்றார் என்றால் சரியல்ல. என் மனைவி பஞ்சாயத்தில் கவுன்சிலராக இருந்தார் என்றால் சரிதான். அவர் அப்போதிருந்த ஆளும்கட்சியை சார்ந்தவர் என்றால் சரி. நானும் என் மனைவியும் வாதி தரைதளத்தில் குடியிருந்ததை பல வகையில் இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. வாதி மற்றும் அவரின் மனைவி மீது போலிசில் பொய்யான புகார் கொடுத்து வழக்குகள் பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. வாதி அவரது கடைப்பகுதியை அனுபவிப்பதை தடுப்பதற்காக அதை நாங்கள் பூட்டி வைத்தோம் என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாடு சுப்பிரமணியம் மற்றும் மோகனசுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் ஏற்பட்டது என்றால் சரியல்ல, அவர்கள் வாதியின் பங்குதாரர் மற்றும் வாதியின் மனைவியின் சகோதரியின் கணவர். வாதியின் திருமணத்தின்போது சுமூக உறவு இருந்தது என்றால் சரிதான். மோகனசுந்தரம் , சுப்பிரமணி ஆகியோர் எனக்கும் உறவினர் என்றால் சரியல்ல. வாதி

தற்போது குடியிருக்கும் இடம் வாதியின் மனைவியின் தகப்பனார் கொடுத்த இடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் மனைவியின் தகப்பனார் ஊர் கள்ளியம்புதுர். கள்ளியம்புதுர் இடத்தில் தான் வாதி குடியுள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் உயில் ஏற்படுத்திய விவரம் மற்றும் குடும்ப ஏற்பாடு ஆகியவை எனக்கு அவ்வப்போது தெரியும் என்றால் சரியல்ல. உயில் படி வாதி சொத்தை அனுபவிப்பதை நான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் என் தகப்பனார் பெயரில் உள்ள ரசீதுகள் என்றால் சரிதான். பிசாஆ 3 அடிப்படையில் நான் எவ்வித தனிப்பட்ட உரிமையும் கோர முடியாது என்றால் நான்  கோரவில்லை, சொத்து பொதுவில் தான் உள்ளது. வாதி தாவாவில் கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.03 17:32:32 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS